# தேச முன்னேற்றம் இந்தி கற்பதில் தான் இருக்கிறதா?

## காங்கரஸ் அங்கத்தினர்களில் எவ்வளவு பேருக்கு இந்தி தெரியும்?

### மந்திரி சபையில் எத்தனை பேருக்குத் தெரியும்.

### ஏன் சிறுவர்களை இந்தி படிக்கச் செய்கிறீர்.

### தமிழரை ஆரியர் அடிமையாக்கும் சூழ்ச்சியா?

(மதுரை கே. பி. அப்பன்)

சென்னை காங்கரஸ் மந்திரிகள் போகுமிடமெல்லாம் இந்திப் பிரச்னையைப் பற்றி ஏதாவது உளறிக்கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். அறிவுடைய மக்கள் சற்று நிதானத்துடன் யோசனை செய்து பார்ப்பார்களேயானால் ஆச்சாரியார் செய்வது வீண் பிடிவாதமே தவிர அவருடைய இந்தித்திட்டத்தினால் ஓர் கடுகளவு பிரயோஜனமுமில்லையென்று நன்கு உணர்வார்கள்.

இந்தி பாஷையில் உயிர், மெய், உயிர்மெய் முதலிய எழுத்துக்களில் மொத்தம் 478 எழுத்துக்களிருக்கின்றன. இது தவிர கூட்டெழுத்துக்கள் வேறு. இன்னும் ஒரு எழுத்தையே வேறொரு விதமாக எழுதக் கூடிய எழுத்துக்கள் வேறு. இப்படியாக இந்தியில் தெரிந்துகொள்ளவேண்டிய எழுத்துக்கள் 490-க்குக் குறைவில்லை. ஆச்சாரியாரின் திட்டத்தின்படி இந்தியை ஒவ்வொரு மாணவனும் 3 வருஷங்கள் கட்டாயமாக படிக்கவேண்டும். வாரத்திற்கு மூன்று மணிநேரம் படித்தால் போதுமாம். ஒரு வருஷத்தில் பள்ளிக்கூடங்கள் அதிகப்படியாக 200 நாட்களுக்கே நடத்தப்படும். மற்ற 165 நாட்கள் விடுமுறையா இருக்கும். ஆகையால் இத்திட்டத்தின்படி ஒரு மாணவன் 3 வருஷங்களிலும் 300 மணி நேரம் இந்தி கற்கிறான். ஆங்கில பாஷையில் உள்ளது 26 எழுத்துக்களே. அதை மூன்றாவது வகுப்பிலிருந்து கற்றுக்கொடுக்கிறார்கள். ஒருவன் 8 ஆண்டுகள் தினம் குறைந்த பட்சம் 1 மணி நேரமாவது படித்து முடிவில் ஸ்கூல் பைனல் பரீட்சை தேறினால்தான் அவனுக்கு ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரியும் என்று இந்த காங்கரஸ் கவர்ன்மெண்டாரே கருதுகிறார்கள். அதற்குக் குறைந்தால் ஆங்கிலம் தெரியாதவனென்று உத்தியோகம் கிடையாது. 26 எழுத்துக்களேயுள்ள ஆங்கில பாஷையை எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள 1600 மணி நேரம் தேவையிருக்கும்பொழுது, 490 எழுத்துக்களையுள்ள (ஒவ்வொருஎழுத்தும் சித்திரம் எழுதுவதுபோல் தோன்றும்) இந்தி பாஷையை 300 மணி நேரம் படிப்பதனால் ஒருவன் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியும் என்பது ஒரு மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருக்கும் ஒருவருக்குத் தெரியாமலிருக்குமா? அவருக்குத் தெரியும். இருந்தாலும் காங்கரஸ விரோதிகளென்று ஒதுக்கப்பட்டவர்களாலும் சிறப்பாக தோழர் ஈ. வெ. ராமசாமியாராலும் கண்டிக்கப்படும் ஒன்றை தான் விட்டுக் கொடுப்பதா என்ற பிடிவாத குணமே ஆச்சாரியாரைப் பிடித்தாட்டுகிறது என்பதைத் தவிர வேறு என்ன காரணமிருக்க முடியும்?

#### உமது சூழ்ச்சி என்ன?

தேச முன்னேற்றம் இந்தி கற்பதில் தான் இருக்கிறதுஎன்று பிதற்றும் ஆச்சாரியாரே! தமிழ்நாட்டிலே தேச விடுதலைக்காகப் பாடுபடும் காங்கரஸ் சபையின் அங்கத்தினர்களில் எவ்வளவு பேர் இந்தி கற்றவர்களென்று உம்மால் சொல்ல முடியுமா? ஜில்லா, டவுன், தாலூகா, கிராம காங்கரஸ்கமிட்டி அங்கத்தினர்களில் எவ்வளவு பேர் இந்தி கற்றவர்கள்? சென்னை சட்டசபை காங்கரஸ் அங்கத்தினர்களில் எவ்வளவு பேர் இந்தி கற்றவர்கள்? உமது மந்திரி சபையிலே எவ்வளவுபேருக்கு இந்தி தெரியும்? வீண் பிடிவாதம் செய்யும் ஆச்சாரியாரே! தேச நலத்திற்காக தங்கள் உடல், பொருள், ஆவியனைத்தையும் அர்ப்பணஞ்செய்ய தயாராயுள்ள இவர்களுக்கெல்லாம் தேவையில்லாத இந்தியை தமிழ்நாட்டு சிறுவர், சிறுமிகளை கட்டாயப்படுத்தி படிக்கச் செய்வதில் உமது நோக்கமென்ன? மக்களைச் சிறையிலிட்டும் எங்கள் சிறுவர், சிறுமிகளை கட்டாயம் இந்தி படிக்கச் செய்யும் உமது சூழ்ச்சியென்ன? ஒற்றுமை இழந்து தவிக்கும் தமிழ் மக்களை என்றென்றும் ஆரியர் அடிமையாக்கச் செய்யும் ஓர் சூழ்ச்சியே தவிர வேறு என்னவாகஇருக்க முடியும்!

உண்மையில் தேச முன்னேற்றம் இந்தி கற்பதில் தான் இருக்கிறது என்று நீர் கருதுவீரானால், இந்தி கற்றவர்களே காங்கரசில் அங்கத்தினராகலாமென ஏன் ஏற்படுத்தக் கூடாது? அல்லது இந்தி கற்றவர்கள் தான் காங்கரசில் பொறுப்பான பதவிகள் வகிக்கவும், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, சட்டசபை, மந்திரிசபைகளில் அங்கத்தினராகவும், மேடையிலேறி இந்திக்காக வக்காலத்து வாங்கிப் பேச யோக்கியதையுடையவர்களென்றாவது ஏன் ஏற்படுத்தக் கூடாது? ஆச்சாரியாரே! இவைகளைச் செய்ய முதலில் நீர் முன் வருவீரானால் உண்மையில் தாங்கள் தேச நலம் கருதுகிறீர்கள் என்று எண்ணுவோம். இவைகளைச் செய்ய முன் வராத வரையில் தங்களை ஓர் வீண் பிடிவாதக்காரரென்று சொல்லாமல் என்ன செய்வது?

---

கள் செய்வோம் எனக் கூறப்பட்டது.

இ:- ஏழைகளுக்கு வரி அதிகமானதுடன் கங்கம என்ற சுமையும் தலைமேல் ஏற்ற ஏற்பாடாகிறது.

அ:- சீர்திருத்தங்களை உடைப்போம். சட்டசபைக்குள் போய்விட்டதால் நம் போராட்டம் தீர்ந்துவிட்டதென எண்ண வேண்டாம். இனிதான் நாம் வெளியிலும் உள்ளும் போராட வேண்டுமெனக் கூறப்பட்டது.

இ:— சீர்திருத்தங்களைச் சரிவர ஒழுங்காகநடத்திக் கவர்னர்களிடம் சர்ட்டிபிகேட்டும் வாங்கப்படுகிறது.